
# எத்தனை?



5

## தாத்தா வெளியே செல்லுதல்



குழந்தைகளைப் படத்தை பார்க்க வைத்து பூங்காவில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பகிர வையுங்கள். மேலும், அவர்கள் பூங்காவில் இருக்கும் மக்களின் எண்ணிக்கையும் விவாதிக்க வேண்டும். சான்றாக, முதல் படத்தில் எத்தனைக் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடன் எத்தனை குழந்தைகள் சேர்ந்தனர். குழந்தைகளைத் தாத்தா பாட்டியுடன் நேரம் செலவழிப்பதற்கான முக்கியத்துவத்தையும் அவர்களுக்கு எப்படி மரியாதை கொடுக்க வேண்டும் என்பதையும் வகுப்பறையில் விவாதிக்க வைத்து அவற்றை மற்றவர்களுடன் பகிரும்படி செய்யுங்கள்.




© NCERT not to be republished

எத்தனை சேர்ந்திருக்கிறது என்பதை கூறுக? கோடிட்ட இடங்களை நிரப்புக.




4 குழந்தைகள் மற்றும் 2 குழந்தைகள் மொத்தமாக ___ குழந்தைகள்..

4 + 2 = ☐



3 மேலாடைகள் மற்றும் 1 மேலாடை மொத்தம் ___

மேலாடைகள்.3 + 1 = ☐



3 எறும்புகள் மற்றும் 2 எறும்புகள் மொத்தம் ___

எறும்புகள்.3 + 2 = ☐




4 பென்சில்கள் மற்றும் 3 பென்சில்கள் மொத்தம் ___ பென்சில்கள்.4 + 3 = ☐

குழந்தைகளுக்குப் பல்வேறு பொருட்களைக் கூட்டுவதற்குப் போதுமான அளவு வாய்ப்பு கொடுங்கள். இரண்டு குழுக்களை இணைக்கும்போது உருவாகும் மொத்த எண்ணிக்கையைக் கண்டுபிடிக்கவும் தற்போது இருக்கும் பொருட்களுடன் மேலும் அதிகமான பொருட்களைக் கூட்டுவதற்கும் குழந்தைகளை ஊக்குவியுங்கள். குழந்தைகள் இரண்டு வகையான கூட்டல் வகைப்பாடுகளையும் பயிற்சி வேலையாக செய்து முடித்திருக்க வேண்டும்.




© NCERT not to be republished



______________________

6 பந்து மற்றும் 2 பந்து மொத்தம் ___ பந்துகள்.

6 + 2 = [ ]



7 + 1 = [ ]



## எண்ணுவோம்

அ. மொத்தமாக உங்களுடைய பெற்றோருக்கு எத்தனை சகோதரிகள் மற்றும் சகோதரர்கள் உள்ளனர்?

ஆ..உன்னுடைய நண்பருடைய வீட்டில் மொத்தம் எத்தனை குடும்ப உறுப்பினர்கள் உள்ளனர்?

இ. உங்களுடைய இரண்டு கைகளையும் சேர்த்து மொத்தம் எத்தனை விரல்கள் உள்ளன?

ஈ. உங்களுடைய விரல்களை வைத்து எத்தனை எண்களை எண்ணலாம்?


© NCERT not to be republished




குழந்தைகள் கூட்டல்களைப் புரிந்துகொள்ளவும் கூட்டல் தொடர்களைச் சத்தமாகக் கூறவும் ஊக்கப்படுத்துங்கள். சான்றாக, 4 குழந்தைகள் மற்றும் 2 குழந்தைகள் மொத்தமாக 6 குழந்தைகள். இங்கு கூட்டல் என்பதற்கு (+) குறியீட்டையும் சமம் என்பதற்கு (=) குறியீட்டையும் பயன்படுத்துக. குறியீட்டு முறை மற்றும் எண்களைக் கூட்டச் செல்வதற்கு முன்பு கொடுக்கப்பட்ட பொருட்களை வைத்து மொத்தம், கூட்டுத்தொகை, கூட்டல் போன்ற சொல்வளத்தை வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும்.




மொத்த விரல்களின் எண்ணிக்கையை எண்ணி எழுதுக.




$4 + 3 =$ ______




$3 + 2 =$ ______



$5 + 3 =$ ______



$4 + 0 =$ ______




$4 + 4 =$ ______



## பகடை வைத்து கூட்டல் விளையாட்டை விளையாடுவோம்.

இரண்டு பகடைகளையும் உருட்டி கீழேபோடுங்கள். கீழே கிடக்கும் இரண்டு பகடையில் விழுந்திருக்கும் மொத்த புள்ளிகளைக் கண்டுபிடிக்கவும். இப்போது உங்கள் நண்பரைப் பகடையை உருட்டச் சொல்லி விழும் புள்ளிகளின் மொத்தத்தைக் கண்டுபிடிக்கவும். யார் அதிக மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்கவும்.



© NCERT not to be republished




## நாம் விளையாடுவோம்

கிஷோரும் நித்தியாவும் இந்த விளையாட்டை விளையாடினர். இங்கு அவர்கள் பெற்ற புள்ளிகள் உள்ளன. இந்த மதிப்பெண் பட்டியலை வைத்துக்கொண்டு இதில் கிஷோர் எத்தனை முறை வெற்றிபெற்றார் நித்தியா எத்தனை முறை வெற்றிபெற்றார் என கண்டுபிடிக்கவும்.



| | கிஷோர் | நித்யா |
|---|---|---|
| அ. | ✓ | |
| ஆ | | |
| இ. | | |
| ஈ | | |
| உ | | |








© NCERT not to be republished


## மணிகள் மற்றும் சரங்கள்

கீழே கொடுக்கப்பட்ட எண்களை அடிப்படையாகக் கொண்டு சரத்திலிருக்கும் மணிகளுக்கு வண்ணம் தீட்டுக. மொத்தம் எத்தனை வண்ண மணிகள் உள்ளன என்பதைக் கண்டுபிடிக்கவும்.


அ. 3 + 4 =




ஆ. 4 + 2 =




இ. 5 + 4 =



ஈ. 2 + 7 =



உ. 7 + 3 =



குழந்தைகள் மணி சரங்களை வைத்து விளையாடுவதை ஊக்கப்படுத்துங்கள். இந்த விளையாட்டின் போது அவர்கள் கூட்டுவதற்கு எந்த மாதிரியான தந்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை விவாதியுங்கள்.




© NCERT not to be republished

துள்ளுதல் மற்றும் கூட்டுத்தொகையை கண்டுபிடித்தல்.


4 + 2 =





3 + 2 =




5 + 3 =




6 + 3 =




© NCERT not to be republished

## உங்களுடைய வழியில் கூட்டுங்கள்.

அப்துல் மற்றும் ரெஹானா வெவ்வேறு வழிகளில் இந்த எண்களைக் கூட்டினர். கூட்டுத்தொகையைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.




| | |
|---|---|
| $\begin{array}{r} 2 \\ +\ 3 \\ \hline \ \end{array}$ | 2 + 3 = ____ |
| $\begin{array}{r} 5 \\ +\ 1 \\ \hline \ \end{array}$ | 5 + 1 = ____ |
| $\begin{array}{r} 3 \\ +\ 3 \\ \hline \ \end{array}$ | 3 + 3 = ____ |
| $\begin{array}{r} 9 \\ +\ 1 \\ \hline \ \end{array}$ | 9 + 1 = ____ |


© NCERT not to be republished





## நாம் விளையாடுவோம்.

A. எண் இணைகளை நிரப்புக.




கோனார்
சூரியத்தேரிலிருக்கும் சக்கரம்

| | | |
|---|---|---|
| 6 + 3 | 6 | 3 + 4 |
| 5 + 2 | 7 | 3 + 2 |
| 0 + 6 | 9 | 5 + 4 |



## திட்டப்பணி

0 முதல் 9வரையிலான அட்டைகளை எடுத்துக்கொள்ளுங்கள்..
கூட்டுத்தொகை 9 வரும்படி அந்த அட்டைகள் அனைத்தையும் அடுக்குக.
இதைச் செய்வதற்குப் பல வழிகள் உள்ளன.
உங்களால் எத்தனை வழிகளில் செய்ய முடியும்?

☐ + ☐ = 9

☐ + ☐ + ☐ = 9

☐ + ☐ = 9

© NCERT not to be republished

## கூட்டல் கதை

A. ராகவ் 4 சங்குகள் வைத்திருந்தான். சரிதா 5 சங்குகள் வைத்திருந்தாள். .

மொத்தமாக அவர்கள் எத்தனை சங்கு வைத்திருந்தனர்?

B. ரஞ்சித் 3 மார்பல்கள் வைத்திருந்தான். மீனாட்சி 6 மார்பல்கள் வைத்திருந்தாள்

.மொத்தமாக அவர்கள் எத்தனை மார்பல்கள் வைத்திருந்தனர்?

C. ஒரு பையில் 3 தேங்காய் இருந்தன. மற்றொரு பையில் 4 தேங்காய் இருந்தன. .

மொத்தமாக அங்கு எத்தனை தேங்காய் உள்ளன?

நம்முடைய பையில் நாம் என்ன வைத்திருக்கிறோம் என்பதைப் பார்ப்போம்..

உங்களுடைய நண்பருடன் சேர்ந்து செய்யுங்கள். விடைகளைக் கீழே எழுதுங்கள்.

A. என்னுடைய பையில் ____ புத்தகங்கள் இருந்தன. என்னுடைய நண்பன் பையில் ____ புத்தகங்கள் இருந்தன. மொத்தமாக நாங்கள் இருவரும் ____ புத்தகங்கள் வைத்திருந்தோம்


B. நான் ____ பென்சில்கள் வைத்திருக்கிறேன். என்னுடைய நண்பன் ____ பென்சில்கள் வைத்திருக்கிறான். நாங்கள் இருவரும் சேர்ந்து மொத்தம் ____ பென்சில்கள் வைத்திருக்கிறோம்

C. .நான் ____ குறிப்பேடுகள் வைத்திருக்கிறேன். என்னுடைய நண்பன் ____ குறிப்பேடுகள் வைத்திருக்கிறான். நான்கள் இருவரும் சேர்ந்து மொத்தமாக ____ குறிப்பேடுகள் வைத்திருக்கிறோம்.



## சிந்தித்துச் செயல்படு.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் புள்ளிக் கோட்டில் காட்டப்பட்டுள்ளது போன்று கொடுக்கப்பட்ட அட்டவணையில் 1, 2, மற்றும் 3 என எழுதுக. ஒவ்வொரு முறையும் 6 வரை கூட்ட வேண்டும்.




இந்தச் செயல்பாட்டை இணைகளாக வைத்துச் செய்ய வேண்டும். குழந்தைகளை அவர்களுக்கான கணக்குகளையும் கேள்விகளையும் உருவாக்க ஊக்கப்படுத்துங்கள். மேலும், உலகத்தில் பழமையான கோவிலான ஒடிசாவில் இருக்கும் கோனார்க் கோவில் பற்றி வகுப்பறையில் விவாதியுங்கள். கோனார்க் சூரியத்தேரின் சக்கரப்படத்தைக் காட்டுங்கள்(பக்கம் 56)

© NCERT not to be republished

# ஐந்து சிறு குழந்தைகள்.

ஐந்து குழந்தைகள் நீங்கள் உங்களுடைய கைகளை உயர்த்திக்கொண்டு இங்கு வாருங்கள். நீங்கள் ஒரு அடி வெளியே எடுத்து வைத்து விட்டால் உருமிக்கொண்டு நாங்கள் நான்கு பேர்! என கூறவேண்டும்.








நான்கு குழந்தைகள் கைகளை உயர்த்துகின்றனர். இங்கே வந்துவிட்டோம். மரத்தின் அருகில் இருப்பவர் ஒரு அடி தள்ளி நிற்க வேண்டும். இப்போது நாங்கள் மூன்று பேர்!





மூன்று குழந்தைகள் கைகளை உயர்த்துகின்றனர். இங்கே வந்துவிட்டோம். மின்னும் காலணி அணிந்திருப்பவர்கள் ஒரு அடி தள்ளி நிற்க வேண்டும். இப்போது நாங்கள் இரண்டு பேர்!



© NCERT not to be republished

இரண்டு குழந்தைகள் கைகளை உயர்த்துகின்றனர். இங்கே வந்துவிட்டோம். சூரியனைப் பார்த்து நிற்பவர் ஒரு அடி தள்ளி நிற்க வேண்டும். இப்போது மீதம் இருப்பவர் ஒருவர்!




ஒரு குழந்தை கைகளை உயர்த்துகிறது. இங்கே வந்துவிட்டோம். இங்கு மிகவும் மகிழ்ச்சியாக இருப்பவர் கடைசி ஒரு அடி தள்ளி நிற்க வேண்டும். இப்போது யாருமில்லை.

## நாம் பேசுவோம்

A. பேருந்தில் எத்தனை குழந்தைகள் தொடக்கத்தில் இருந்தனர்?

B. முதல் பேருந்து நிறுத்தத்தில் எத்தனை குழந்தைகள் இறங்கினர்?


C. முதல் பேருந்து நிறுத்தத்திற்குப் பின்பு பேருந்தில் எத்தனை குழந்தைகள் இருந்தனர்?

D. இரண்டாவது பேருந்து நிறுத்தத்திற்குப் பின்பு பேருந்தில் எத்தனை குழந்தைகள் இருந்தனர்?

E. கடைசியாகப் பேருந்தில் எத்தனை குழந்தைகள் இருந்தனர்?

© NCERT not to be republished





## திட்டப்பணி

உங்கள் வீட்டில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்பதைக் கண்டுபிடி. எத்தனை பேர் பள்ளிக்குச் சென்று இருக்கின்றனர். எத்தனை பேர் வேலைக்குச் சென்று இருக்கின்றனர், எத்தனைப் பேர் வீட்டில் இருக்கின்றனர்.




## நாம் செய்வோம்

A. எத்தனை பேர் உள்ளனர்?

B. கோடிட்ட இடங்களை நிரப்புக.

i.



6 தவளை 2 தவளை குதித்து வெளியே சென்றுவிட்டது

______ மீதம் இருந்தன. 6 – 2 = ______


ii.



7 பலூன்கள் ______ பறந்து சென்றுவிட்டன 5 மீதம் இருந்தன

7 – 2 = ______

iii.



9 வாழைப் பழங்கள்6 பழங்களை எடுத்துச் சென்றுவிட்டனர். ____ மீதம்

9 – 6 = ______

© NCERT not to be republished

C. விடுபட்ட பொருட்களை வரைந்து கோடிட்ட இடங்களை நிரப்புக.

i.








____ பானைகள்   ____ பானைகள் உடைந்துவிட்டன.   ____ மீதம்

3 - ______ = ______

ii.








7 லட்டுகள்   4சாப்பிட்டுவிட்டனர்   ____ மீதம்

7 - 4 = ______

iii.







7 பந்துகள்   ______பந்துகளை எடுத்துச் சென்றுவிட்டனர்   ______ பந்துகள் மீதம் உள்ளன

D. பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்கவும்.

i. மனிஷா 9 வாழைப்பழங்களை வைத்திருக்கிறாள்அதில் 3 பழங்களைச் சாப்பிட்டுவிட்டாள். எத்தனை வாழைப்பழங்கள் மீதம் இருக்கும்? ☐


ii பூக்களில் 8 பட்டாம்பூச்சிகள் உள்ளன. 5 பட்டாம்பூச்சிகள் பறந்தன. இன்னும் எத்தனை பட்டாம்பூச்சிகள் உள்ளன? ☐

© NCERT not to be republished





## நாம் செய்வோம்

நீங்களே பத்து புள்ளிகள் கொண்ட ஒரு அட்டையைத் தயார் செய்யுங்கள். அதில் சில புள்ளிகளை உங்களுடைய நண்பனிடமிருந்து மறைத்து வையுங்கள். அவர்களிடம் எத்தனைப் புள்ளிகள் மறைந்து இருக்கிறது என கேளுங்கள்?



எத்தனை புள்ளிகள் தெரியும்படி உள்ளன மற்றும் எத்தனை புள்ளிகள் மறைந்து உள்ளன?

| புள்ளிகள் 10 | மறைந்திருக்கும் புள்ளிகள் | வெளியே தெரியும் புள்ளிகள் |
|---|---|---|
|  | 0 | 10 |
|  | | |
|  | | |




## திட்டப்பணி

குழந்தைகளிடம் எட்டு புள்ளிகளை வைத்து ஒரு சட்டகத்தை உருவாக்கச் சொல்லுங்கள். இப்போது அவர்களுடைய கைகளையோ கை கூட்டையையோ வைத்து சில புள்ளிகளை மறைத்துவிட்டு எத்தனை புள்ளிகள் மறைந்துள்ளன மற்றும் எத்தனை புள்ளிகள் வெளியே தெரியும்படி உள்ளன என கேளுங்கள். இதில் ஏதாவது எண் முறை இருக்கிறதா? இந்தச் செயலை மற்ற எண்களுக்கும் நீட்டியுங்கள். புள்ளிகளை மறைக்காமல் இவற்றைச் செய்வது சாத்தியமா?




© NCERT not to be republished


பின்னோக்கித் தாவி எண்களைக் குறைத்தல்.




9 இலிருந்து 3 படிகள் பின்வாங்கவும்.




7லிருந்து 4 அடி பின்னோக்கி தாவு..




7லிருந்து 4 அடி பின்னோக்கி தாவு.

அ 8 – 2 =

ஆ 7 – 3 =

இ. 9 – 5 =

ஈ. 6 – 3 =

உ. 5 – 1 =

ஊ. 4 – 2 =

© NCERT not to be republished